உ

சிவமயம்.

காரியாசான்செய்த

# சிறுபஞ்சமூலம்.

இஃது

உரையுடன்

சண்முகசுந்தரமுதலியா
ரவர்களாற்பரிசோதித்து,

திரிசிரபுரம்புத்தகவியாபாரம்

தி-சபாபதிபிள்ளை

யவர்களது

மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

யுவ௵-மேடரவி.

சிந்தாதிரிப்பேட்டைசாமிநாயக்கர்வீதி-௯-௬௩.

சங்கமருவியபதினெண்கீழ்கணக்காவன

நாலடிநான்மணிநானாற்பதைந்தொகைமுப்
பால்கடுகங்கோவைபழமொழி-மா மூலம்
மெய்ந்நிலைகாஞ்சியோடேலாதியென்பவே
கைந்நிலையவாங்கீழ்கணக்கு.

என்பனவாம்.

# சிறுபஞ்சமூலமூலமும்

## உரையும்.

முழுதுணர்ந்து மூன்றொழித்து மூவாதான்பாதம்
பழுதின்றியாற்றப் பணிந்து-முழுதேத்தி
மண்பாயஞாலத்து மாந்தர்க்குறுதியா
வெண்பாவுரைப்பன் சில.

(எ-து) கடவுள்வாழ்த்து. காமாதிமூன்றையுமொழித்து, முற்றுமுணர்ந்து, மூப்பில்லாதான்பாத மனக்குற்றநீக்கமிகவும்வணங்கிப் பலகுணங்களைப்புகழ்ந்துமண்பரந்தவுலகில் மக்கட்கெல்லாமுறுதியாகிய பொருண்மேற்றொடுத்து வெண்பாவாகியசிலசெய்யுட்களையுரைப்பேன்—எ-று. இதனுட் குற்றமூன்றுமொழித்தலு, முழுதுணர்ச்சியு, மூவாமையு மென வைந்தாகக் கொள்க. (க)

ஒத்தவொழுக்கங்கொலைபொய்புலால்களவோ
டொத்தவிவையலவோர் நாலிட்-டொத்த
உறுபஞ்சமூலந்தீர்மாரிபோற்கூறீர்
சிறுபஞ்சமூலஞ் சிறந்து.

(எ-து) பொருந்தியவொழுக்கங் கொலை பொய் புலால் களவோடொத்தவிவையன்றி யிவற்றுக்குமறு

தலையாகிய நான்குமென்றுசொல்லப்பட்டவிவ்வைந்து மகப்பட மிக்கபஞ்சத்தின்மூலத்தைத்தீர்க்குமாரிபோலச் சிறுபஞ்சமூலமென்று மருந்தாகக்கூறினார்மிக்கு— எ-று. சிறுபஞ்சமூலமாவன - கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லிவேர்-ஆக-ரு. (௨)

பொருளுடையான்கண்ணதேபோகமறனு
மருளுடையான்கண்ணதேயாகும்-அருளுடையான்
செய்யான்பழிபாவஞ்சேரான்புறமொழியு
மூய்யான்பிறர்செவியிற் குய்த்து.

(எ-து) பொருளுடையான்கண்ணதேயாகும்இன்பம்,அறவினையு முயிர்கள்மேலருளுடையான்மாட்டேயாகும், அவ்வருளுடையான்பழியைச்செய்யான, பாவத்தையடையான், பிறர்செவியின்கட்செலுத்திப்பிறரைப்பழிப்படக்கூறும்புறமொழிகளையும்நடத்தான்- எ-று. (௩)

கற்புடையபெண்ணமிர்துகற்றடங்கினனமிர்து
நற்புடையநாடமிர்தந்நாட்டுக்கு-நற்புடைய
மேகமேசேர்கொடிவேந்தமிர்துசேவகனு
மாகவேசெய்யி னமிர்து.

(எ-து) கற்புடையபெண் டனதுகொழுநற்கமிர்தோடொக்கும்,கற்றுவைத்துப் பொறிகளைந்தையும

க்கினு னுலகத்தார்க்கமிர்தோடொக்கும், நற்செய்கை களையுடையநாடுக ளந்நாடாளுமரசர்க்கமிர்தோடொக்கும், அந்நாட்டிற்கு மழைபோலநன்மையைச்செய்யு மேகத்தைச்சேர்ந்தகொடிவேந்த னமிர்தோடொக்கும், அவன்சேவகனு மவ்வரசற்கு நன்மையாகவேசெய்யி னமிர்தோடொக்கும்—எ-று. (ச)

கல்லாதான்றான்காணு நுட்பமுங்காதிரண்டு
மில்லாதாளெக்கழுத்தஞ்செய்தலு-மில்லாதா
னெல்லாப்பொருளில்லார்க்கீய்த்தளியாமென்றலு
நல்லார்கள் கெட்பி னகை.

(எ-து.) கல்லாதானொருவன் றானாய்ந்துகாணு நுண்மைப்பொருளும், காதிரண்டுமில்லாதா ளழகுடையேனென்றெடுத்தமுகத்தினளாயொழுகலும், பொருளில்லாதான் இல்லாதார்க்கீய்த்தறியாமென்றலும், ஒருவன் றான்றவக்கியைன்ற பொருளன்றி யியலாத பொருளை யீயாதாமென்றலும் அறிவுடைய நல்லோர் கேட்பி னகையாம்—எ-று. (ரு)

உடம்பொழியவேண்டினுயர்தவமாற்றீண்
டிடம்பொழியவேண்டுமேலீகை-யடம்பொழிய
வேண்டினறிமடம்வேண்டேல்பிறர்மனை
யீண்டினியையுந்திரு.

(எ-து) பிறப்பான்வருமுடம்பை நீக்கவேண்டினா னாயி னுயர்தவத்தைச்செய்க, இவ்வுலகத்தினிடமெல்லாந் தன்புகழால்நிறையவேண்டினானாயி னீகையைச்செய்க, மெல்லியவீரந் தனக்குநிறையவேண்டினானாயினறிவின்கணடங்கியொழுகுக, பிறர்மனையாளைவிரும்பாதொழுகுக, சிறிதாயினும் வருவாய்நாடோறு மீண்டிற்செல்வமொருவற்கேகூடும்—எ-று. (சு)

படைதனக்குயானைவனப்பாகும்வெண்ணி
னிடைதனக்குநுண்மைவனப்பா-நடைதனக்குக்
கோடாமொழிவனப்புக்கோற்கதுவேசேவகர்க்கு
வாடாதவன்கண் வனப்பு.

(எ-து) சேனைக்குவனப்பாவது யானை, பெண்ணிடைக்குவனப்பாவது நுண்மை, ஒழுக்கத்துக்குவனப்பாவது ஒருவற்காகப்பாங்குளாயாமை, செங்கோலுக்குவனப்பாவதொருவர்க்குப் பாங்குளாயாமை, சேவகர்க்குவனப்பாவது கெடாதவன்கண்மையெ-று. (எ)

பற்றினான்பற்றற்றா னூறவசியெப்பொருளு
முற்றினானாகுமுதல்வனூற்-பற்றினாற்
பாத்துண்பான்பார்ப்பான்முழியுணர்வான்சான்றவ
காத்துண்பான்காணான் பிணி. (அ)

(எ-து) பற்றற்றானூற் சொல்லப்பட்டநூலைப்பற்றினான் றவசியாவான், எப்பொருளையுமுற்றவறிந்தான்

முதல்வனாவான், நூலின்கட்சொன்னபடியேபகுத்து
ண்பான் பார்ப்பானாவான், பழியையுணர்வான் சான்
றோனாவான், தனக்குநுகரலாகாதென்றுசொல்லியவற்
றை நுகராதேகாத்துநுகர்வான் பிணிகாணான்—எ-று(

கண்வனப்புகண்ணோட்டங்கால்வனப்புச்செல்லாமை
யெண்வனப்பித்துணையாமென்றுரைத்தல்-பண்வன
கேட்டார்நன்றென்றல்கிளர்வேந்தன்றன்னாடு (ப்புக்
வாட்டானன்றென்றல் வனப்பு.

(எ-து) கண்ணிற்குவனப்பாவது பிறர்மேற்கண்
ணோடுதல், காலிற்குவனப்பாவது பிறர்மாட்டிரந்து
செல்லாமை, ஆராய்ந்துசூழுஞ்சூழ்ச்சிக்குவனப்பாவ
திவ்வளவினனதென்றுதுணிந்துரைத்தல், பாடும்பண்
ணிற்குவனப்பாவதுகேட்டார்நன்றென்றல், படைகிளர்
ந்தெழும்வேந்தர்க்குவனப்பாவது தானாளுநாட்டினைவ
ருத்தானமிகவுநன்றென்றல்—எ-று. (கூ)

கொன்றுண்பானாச்சாங்கொடுங்கரிப்போவானாச்சா
நன்றுணர்வார்முன்கல்லாதானாவுஞ்சா-மொன்றானுங்
கண்டுழிநாச்சாங்கடவான்குடிப்பிறந்தா
னுண்டுழிநாச்சா முணர்ந்து.

(எ-து)உயிர்களைக்கொன்றுண்பானுடையநாச்சா
ம், ஒருவர்பாங்கிலேநின்றுபொய்ச்சான்று போவானு
டையநாவுஞ்சாம், மிக்ககற்றுணர்ந்தோர்முன்பொரும

றுமாற்றஞ்சொல்லமாட்டாது கல்லாதானுடையநாவு ஞ்சாம், தனிசுவேண்டிவந்தா னொருவனைக் கண்டாற் றனிசுகொண்டவனுடைய நாவுஞ்சாம், குடிப்பிறந்தா னொருவனுடையநா வொருவனுதவிபெற்றவிடத் தவ்வு தவிசெய்தான்றிறத் தொருதிமைசொல்லமாட்டாது ம ற்றவன்செய்தநன்றியைநினைத்துச்சாம்—எ-று. தனிசு கடன். (க0)

சிலம்பிக்குத்தன்சினைகூற்றநீள்கோடு
விலங்கிற்குக்கூற்றமயிர்தான்-வலம்படா
மாவிற்குக்கூற்றமாஞெண்டிற்குத்தன்பார்ப்பு
நாவிற்குநன்றல்லவசை.

(எ-து)சிலம்பிக்குத்தன்முட்டை சாக்காட்டைக் கொடுக்குமாதலாற் கூற்றமாம், நீண்டதங்கொம்புகள் துன்பங்கொடுக்குமாதலான் விலங்கிற்குமவையேகூற் றமாம், வென்றியில்லாதகவரிமாவிற்குச்சாக்காட்டை க்கொடுக்குமாதலா னதற்குத்தன்மயிரே கூற்றமாம், ஞெண்டிற்குச்சாக்காட்டைக் கொடுக்குமாதலானதற் குத்தன்பார்ப்பேகூற்றமாம், ஒருவனதுநாவிற்குப் பழியைக்கொடுக்குமாதலான் பிறனைநன்றல்லாதவசை சொல்லுதல் கூற்றமாம்—எ-று. (கக)

நாணிலான்சால்பு நடையிலானன்னோன்பு
ஊணிலான்செய்யுமுதாரத்தையு-மேணிலான்

சேவகமுஞ்செந்தமிழ்தேற்றான்கவிச்செயலு
நாவகமேநாடி னகை.

(எ-து) நாணில்லாதானமைதியும், சீலங்களைச்செய்யாதான்கொள்ளுநல்லநோன்பும், தனக்குண்ணும்பொருளில்லாதான்செய்யும் வண்மையும், வலியில்லாதான் சொல்லும் வீரமும், செந்தமிழறியாதான் கவியைச்செய்தலுமென இவ்வைந்து நாவகத்தாலேமேவியாராயினகையாம்—எ-று. உதார்த்தை-உதாரத்துவம். (கஉ)

கோறலுநஞ்சூனைத் துய்த்தல்கொடுநஞ்சு
வேறலுநஞ்சுமாறல்லானைத்-தேறின
னீடாங்குசெய்தலு நஞ்சாமிளங்கிளையை
நாடாதேதீத்துரையு நஞ்சு.

(எ-து) ஒருயிரை யருளின்றிக்கோறலுந்தனக்குநஞ்சுபோலும், பிறிதொன்றினுடைய வூனைத்தின்றலுந்தனக்குக்கொடியநஞ்சுபோலும், தனக்கெதிராகாதானையடர்த்து வெல்லுதலும் தனக்குநஞ்சுபோலும், ஒருவனையொருகருமத்துக்காமென்றாராய்ந்துதேறினவைக்கருமத்தில்விடாதே நீட்டித்துக்கொண்டு செலுத்தலும் தனக்குநஞ்சுபோலும், தன்னினையசுற்றத்தாரையாராயாதேதீதுரைத்தலும் தனக்குநஞ்சுபோலும்—எ-று. (கங)

இடரின்னாநட்டார்கணீயாமையின்னா
தொடர்பின்னாகள்ளார்கட்டீயார்ப்படரின்னா

கண்டலவிர்ஞ்ஙகதுப்பிறுயின்றுதே
கொண்டவிரதங்குறைவு.

(எ-து) நட்டார்மாட்டுக்கண்டவிடரின்று, அவர் மாட்டியாமையின்று, வஞ்சனையுடையார்மாட்டு நடக் குநட்பின்று,மனந்தூயாரைநீங்குதலின்று,கண்டல்வி ளங்குங்குழலாய் தாங்கொண்டவிரதங்கள் நிரம்பமுடி யாதே குறையாகவொழுகுதலின்று—எ-று. (கச)

கொண்டான்வழியொழுகல்பெண்மகன்றந்தைக்கு
தண்டான்வழியொழுகறன்கிளைபஃ-தண்டாதே (ந்
வேல்வழிவெம்முனைவீடாதுமன்னுடு
கோல்வழிவாழ்தல்குணம்.

(எ-து) கொழுநன்வழியொழுகுதல் பெண்குண ம், தந்தைக் கிடைவிடாதே நிரந்தரமாயொழுகல்மக ன்குணம்,அவனைப்போல் வழியொழுகுதல் கிளையின் குணம்,பகைவரோடுசெறியாதே வெல்வழியா னிடை விடாதுவாழ்த லரசன்வெம்முனையின்கட்போயிருந்தா ர்குணம்,அவ்வரசன்கோல்வழியேவாழ்தல் நாட்டின்கு ணம்—எ-று. (கடு)

பிழைத்தல்பொறுத்தல்பெருமைசிறுமை
யிழைத்ததீங்கெண்ணியிருத்த-லிழைத்த
பகைகெடவாழ்வதும்பல்பொருளார்நல்லார்
நகைகெடவாழ்வதுநன்று.

(எ-து) தனக்குப் பிறனொருவன்செய்தபிழையை ப்பொறுத்தல் பெருமையாவது, பிறரிழைத்ததீங்குக ளைமறவாதிருத்தல் சிறுமையாவது, தான்செய்தபிழை களைப் பின்புகெடவாழ்தலும், பலபொருள்களையுமுத வியோரும், நல்லோரு மிகழ்ந்துநகுநகையினைக்கெட வாழ்தலு நன்று—எ-று. நன்றென்றதனைத்தனியே சொல்லி யம்மூன்றிடத்துங்கூட்டிக்கொள்க. (கசு)

கதநன்றுசான்றாண்மைதீதுகழிய
மதநன்றுமாண்பில்லார்முன்னர்-விதநன்றாற்
கொட்வாயிற்கீழுயிர்க்கீ துற்றுக்குரைத்தெழுந்த
நாய்வாயுணல்ல தசை.

(எ-து) நன்மைக்குணமில்லாதார்முன்பு கோப நன்று, சான்றாண்மைதீது, மிக்கவலிசெய்தனன்று, க ளவினைமுகக்கும் கொய்போலும்வாயையுடைய கீழ் மக்கட்கீயுமுளவும், குரைத்தெழுந்தநாய்வாய்க்கீயுமி க்கதசையின்றிறப்பாட்டினன்று-எ-று. துற்று-உணவு.

நட்டாரையாக்கிப்பகைபணித்துவையெயிற்றுய்
பட்டாரகலல்குலார்படிந்-தொட்டித்
துடங்கினாரில்லகத்தன்பிற்றுறவா
வுடம்பினாற்பயன்.

(எ-து) தம்மோடுநட்புக்கொண்டாரைச் செல்வ த்தின்கண்மேலியராக்கி, பகையைக்குறைத்து, கூரிய

வெயிற்றுப் பட்டா ரகலல்குலாரைச்சேர்ந்துமுயங்கி
ப்பொருந்தி,அச்சுற்றமாய்த் தொடர்வுபட்டு முறையா
யினார்மாட்டும், தாம்பிறந்தகுடியிற்பிறந்தார்மாட்டுமன்
பினனீங்கா திப்பெற்றியப்பட்டவைநது முடம்புபெற்ற
தனையபயன்—எ-று. (கரு)

பொய்யாமைபொன்பெறினுங் கள்ளாமைமெல்லிய
வையாமைவார்குழலார்நச்சினு-நையாமை (லார்
யோர்த்துடம்புபேருமென்றூனவாவுண்ணானேற்
பேர்த்துடம்புகோடலரிது.

(எ-து) பொன்பெறுனாயினும்பொய்சொல்லாது
ம், பிறர்பொருளைக்களவுகொள்ளாதும்,எளியாளைவை
யாதும், வார்குழலார்தம்மைக்காதலிப்பினுந் தன்மனந்
தளராதும், தன்னுடம்புதளருமென்றோர்ந்து பிறிதொ
ன்றனூனைக்காதலித் தொருவனுண்ணுனாயின் மறித்து
ப்பிறிதுடம்புகோடலரிது—எ-று. (கசு)

தேவரேகற்றவர்கல்லாதார்தேருங்காற்
பூதரேமுன்பொருள்செய்யாதா-ராதரோ
துன்பமிலேம்பண்டியாமேவனப்புடையே
மென்பாரிருகா லெருது.

(எ-து) நூலைக்கற்றூர்தேவரோடொப்பர், கல்லா
தா ராயுங்காற் பூதபசாசுகளோடொப்பர், தமக்குமூ
ப்புவருதற்குமுன்பேபொருளைத்தேடித்தமக்குவைய

பாகலையாதா ரொன்றுமறியா தொருபற்றின்றித்திரி யுமாந்தரோடொப்பர், பண்டுசெல்வமுடையேமாதலா லொருதுன்பமுமிலேமென்பாரும்பண்டியாமேயழகி யேமென்பாருமிருகாலுடையவெருதுகளோடொப்பர்.

கள்ளான்சூதென்றுங்கழுமான்கரியாரை
நள்ளானுயிரிரங்கா வாடான்-நள்ளானு (றுங்
யூண்மறுத்துக்கொள்ளானே னூனுடம்பெஞ்ஞான்
தான்மறுத்துக்கொள்ளான் றளர்ந்து.

(எ-து) பிறர்பொருளைக்களவுகாணாது, சூதினைப் பற்றிக்காதலியாது, கீழ்மக்களுடனட்புக்கொள்ளாது, பிறர்மனந்துன்புறும்படி வன்சொற்சொல்லாது, கடைப்பிடியுடையனாயூனுணவைமறுத்துவிரும்பானாயின், எஞ்ஞான்றுமொழுக்கத்திற்றளர்ந்துமாறிப்பிறந் தானுடம்பினைக்கொள்ளான்—எ-று. கழுமல்-யற்றுதல். (௨௧

பூவாதுகாய்க்குமரமுளநன்றறிவார்
மூவாதுமூத்தவர்நூல்வல்லார்-தாவா
விதையாமைநாறுவவித்துளமேதைக்
குரையாமைசெல்லுமுணர்வு.

(எ-து) பூவாதேகாய்க்கும் பலாமுதலாயினமரமுள, நன்மையையறிவாராண்டுகளால் மூத்திலராயினு மூத்தாரோடொப்பர், நூல்கற்றுவல்லவருமப்பெற்றியர், நிலத்தில்விதையாதுமுளைக்கும்வித்துமுள, மதி

யுடையவர்க்கும் பிறரறிவியாமேசெல்லுமுணர்வு(உஉ

பூத்தாலுங்காயாமரமுளநன்றறியார்
மூத்தாலுமூவார்நூ றேற்றாதார்-பாத்துப்
புதைத்தாலுநாறாத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ்செல்லா துணர்வு.

(எ-து) பூத்தாலும் காயாத பாதிரிமுதலாயின மரங்களுள, நன்மையையறியாதா ராண்டுகளான்மூத்தாராயினு மூவாதாரோடொப்பர், நூறேற்றாதாருமப் பெற்றியர், பாத்தியின்கட்புதைத்தாலு முளையாதவித்துள, பேதையாயினார்க்குப் பிறருரைத்தாலு முணர்வு புகாது—எ-று. (உந)

வடிவிளமைவாய்த்தவனப்புவணங்காக்
குடிகுலமென்றைந்துங்குறித்து-முடியாத்
துளங்காநிலைகாணார்தொக்கீர்பசுவா
விளங்காற்றுறவாதவர்.

(எ-து) வடிவும்,இளமையும், வாய்த்தவனப்பும், தாழ்வில்லாதகுடிப்பிறப்பும், நற்குலமுமென்றுசொல லப்பட்ட விவ்வைந்தும் தாங்குறித்த நுகர்ச்சிநுகர்ந் தமுடியுமளவு நிற்குநிலைமை யாவருங் காணமாட்டா ர் ஆதலாற் கூடியொருபாரத்தைபிழுக்கு மெருதோ டொப்பர். இளங்காலத்திலேதுறவாதார்—எ-று.(உச)

கள்ளுண்டல்காணிற்கணவர்ப்பிரிந்துறைதல்
வெளகிலராய்ப்பிறரிற்சேற-லுள்ளிப்

பிறர்கருமமாராய்த றீப்பெண்ணிளமைத்
திறமது தீப்பெண்ணின்றெழில்.

(எ-து) கள்ளுண்டலும், ஆராயுங்காற் றங்கணவனைப்புணர்ச்சிவேண்டாதேபிரிந்துறைதலும், நாணிலளாய்ப் பிறருடையமனைக்கட்சேறலும், பிறர்கருமத்தைநினைத்துப்பிறருடனாராய்தலும், தீப்பெண்ணிணோடிணங்குதலுமென விவ்வைந்துந் தனக்கேகூறாகத் தீப்பெண்ணின்றொழில்—எ-று. திறன்-கூறுபாடு (உரு)

பெருங்குணத்தார்சேர்மின் பிறன்பொருள்வெளவன்மின், கருங்குணத்தார்கேண்மைகழிமி- னொருங்குணர்ந்து, தீச்சொல்லேகாமின் வருங்காலனண்ணிதே, வாய்ச்சொல்லேயன் றுவழக்கு.

(எ-து) பெருங்குணத்தாரைச்சென் றடைமின், பிறன்பொருளைக்கொள்ளன்மின், தீக்குணத்தாரோடு நட்பைவிடுமின், எல்லாமுணர்ந்து பிறரைச்சொல்லுந் தீச்சொற்களைச் சொல்லாதுகாமின், காலன்வருகையுண்மையே யாஞ்சொல்லுகின்றவெம்முடைய சொன் மாத்திரையேயன் றுலகின்கண்வழங்கிவருகின்ற வழக்காகக்கொள்க-எ-று. (உசா)

வான்குருவிகூடாக்கு வாலுலண்டுகோற்றருதல்
தேன்புரிந்தியார்க்குஞ்செயலாகா- தாம்புரீஇ
வெல்லவாவாய்ப்பன வென்றொரோரொவொருவர்க்
கொல்காதோரொன்றுபடும்.

(எ-து) வாலிபதுாக்கணங்குருவிசெய்யுங்கூடும், பேரெறும்புகளாற்செய்யப்படுமாக்கும், வாலியவலன் டென்னும்புழுக்களா னூற்றநூலும், வேறொருபுழுவா ற்செய்யப்பட்டகோற்கூடும், தேனீயாற்றிரட்டப்பட் டதேன்பொதியுமெனவிவ்வைந்தும் விரும்பியவர்க்கு ச்செய்யமுடியாவாதலா லெல்லாங்கற்றவல்லவர் நம க்கிவைவாய்ப்பச் செய்யலாமென்றுகளுதார் ஒரோ வொருவற்குச்செயலாற் குறைபடாதே யொரோவொ ருசெய்கை யருமைகளுடைமாதலால்-எ-று. (உஎ)

அறனட்டானன்னெறிக்கணிற்கவடங்கா
புறனட்டான்புன்னெறிபோகாது-புறனட்டான்
கண்டெடுத்துக்கட்களவுசூதுகருத்தினாற்
பண்டெடுத்துக்காட்டும் பயின்று.

(எ-து) அறத்திற்குப்புறமாகிய பாவவினைகளை யுலகத்தின்கண்ணேநட்டான், சொல்லியடங்காதபுல் லியநெறியிற்போகாதே குற்றமில்லாத வறத்தினைச் சொல்லுநூலினையுலகத்துள்ளோநட்ட முழுதுணர்ந்த வறிவினாற்சொல்லப்பட்ட நன்னெறியின்கண்ணே நி ன்றொழுகுக, பாவநெறியினைநட்டவனாராய்ந்தெடுத்து க்கள்ளினையும், களவினையும், சூதினையுந்தன்கருத்தினா லேபயின்று பண்டுசெய்தாரையெடுத்துக்காட்டுமாத லால்—எ-று. (உ அ)

ஆணுக்கம்வேண்டாதாணுசானவர்க்கிளையந்த
மாணுக்கனன்பான்வழிபடுவான்-மாணுக்கன்
கற்பனைத்துமூன்றுங்கடிந்தான்கடியாதா
னிற்பனைத்துநெஞ்சிற்கோர் நோய்.

(எ-து) ஒருவர்க்காசிரியனுவான் பிரமசாரியங்காப்பான், அவனுக்கிளையந்தமாணுக்க னன்புபடுவோனும், வழிபட் டேவியதுசெய்வானுமென விவ்விருவரன்றியும், மாணுக்கனுவான் கற்குமளவும் காமம் வெகுளி மயக்கங்களைக்கடிவான், இவையிற்றைக்கடியாதானிற்குமளவுந் தன்னுசிரியனெஞ்சிற்கொருநோயாம்—எ-று.(

நெய்தன்முகிழத்துணையாங்குடுமிநேர்மயிரு
முய்தலொருதிங்கள்நாளாகும்-செய்த
னுவலைங்குநூலோதுதல்கேட்டல்மாணுக்கர்
வணங்கிவலங்கொண்டு வந்து.

(எ-து) நெய்தன்மொட்டினளவினதா மாணுக்கர்க்குக்குடுமி, தலையின்கணீண்டமயிரு மன்னுதொழிவதொருதிங்களுளாகும், இனியவர்கள்செய்கை யாசானைவலங்கொண்டுவந்துவணங்குதலும், நூல் களைப்பாடமோதுதலும், ஓதியவற்றின்பொருள்கேட்டலுமாக மூன்று—எ-று. இதனுட்செய்தலென்பதுசெய்கை. ()

ஒருவனறிவானுமெல்லாம்யாதொன்று
மொருவனறியாதவனு-மொருவன்

குணனடங்கக்குற்றமில்லானுமொருவன்
கணனடங்கக்கற்றானு மில்.

(எ-து) எல்லாவற்றையுமறிவானொருவனும், யாதொன்றுமறியாதானொருவனும், குணனடங்கவில்லாதானொருவனும், குற்றமில்லாதானொருவனும், எல்லா நூற்பொருள்களையுமொழியாமற்கற்றானொருவனு முலகத்தின்கணில்லை—எ-று. (௨௩)

உயிர்நோய்செய்யாமையுறுநோய்மறத்தல்
செயிர்நோய்பிறர்கட்செய்யாமை-செயிர்நோய்
விழைவுவெகுளியிவைவிடுவானாயி
னிழிவன்றினிதுதவம்.

(எ-து) பிறிதோருயிர்க் கொருநோயுஞ்செய்யாமை, தனக்குப்பிறரால் வந்துற்றநோயைமறத்தல், கோபத்தால்தான்பிறர்மாட்டுஇன்னாதனசெய்யாமை, குற்றத்தைச்செய்யுநோயைப்பண்ணுங்காதலையு, மனத்தின்கட்பிறர்மேலுள்ள செற்றத்தையும் விடுவானாயின் அவன்செய்யுந்தவமிழிவன்றியின்பத்தைத்தரும்—எ-று.()

வேட்பவன்பார்ப்பான்விளங்கிழைக்குக்கற்புடைமை
கேட்பவன்கேடில்பெரும்புலவன்-பாட்டவன்
சிந்தையானாகுஞ்சிறத்தலுலகினுட்
டந்தையானாகுங் குலம்.

(எ-து) வேள்வியைச்செய்தவன் பார்ப்பானுவான், கற்புடையாள் விளங்கிழையாவாள், கேடில்லாத பெரும்புலவனுவான் பலநூல்களையும் பொருளுணரக் கேட்பவன், அப்புலவன் சிந்தையினழகாலேபாடும்பாட்டுச் சிறப்பது, உலகின்கணெருவர்க்குக்குலமுடைமைதந்தையழகாலேயாம்—எ-று. (கூ.கூ)

ஈட்டிவைப்பானைவள்ளல்வழங்குவான்வாணிக
னுய்ப்பானையாசானுயர்கதிக்கு-உய்ப்பா
னுடம்பினேர்வேலியொருப்படுத்தானைத்
தொடங்கானைற்சேறற்றுணிவு.

(எ-து) ஈட்டிவைப்பானைவள்ளலாகக்கொள்ளப்படும், தான்பயனதுகொள்ளாது பிறர்க்குப்பொருள்களைக்கொடுப்பவன்வாணிகனெனப்படாக்கும், அக்கொடையினுயபயன்விளைவு மறுமைக்குத்தனக்குவிளைத்துக்கொடலாலொருவர்க்காசிரியனுவான், அவனையுயர்ந்த பிறப்பின்கண்ணேசெலுத்தவல்லா னடாத்துமொழுக்கத்தானுடம்பாகியவேலியையுடைய வுயிர்களைக்கொண்டொருப்படுத்துப்போக்கி,யவற்றினானை யுண்ளத்தொடங்கானையி னுயர்கதிக்குச்சேறலுண்மையாம்-எ-று. ()

வைத்தவனைக்கும்வசைவணக்கநன்றாகச்
செய்தவனைச்செழுங்குலமும்-செய்த

பொருளினாகுமாம் போகநெகிழ்ந்த
வருளினாகு மறம்.

(எ-து) பிறனையொருவன் வைததனால் வசையா கும், பிறர்க்குவணக்கத்தையு நன்மையையு முளவாகச் செய்ததனான் வளமையுடைய குடிப்பிறப்பாம், காலத் திலே முந்துறச்செய்த பொருளானின்பமாகும், பிற க்குத்தன்மனநெகிழ்ந்தவருளினானறமாகும்-எ-று. ()

இல்லியலார்நல்லறமு மேனைத்துறவறமு
நல்லியலினாடியுரைக்குங்கா-லல்லியற்
றானத்தாற்போகந்தவத்தாற் சுவர்க்கமா
ஞானத்தால் வீடாக நாட்டு.

(எ-து) மனைவாழ்க்கை யியற்கையையுடையார் செய்தநல்லறமும், மற்றைத்துறந்தார் செய்யுநல்லறமு ம், நல்லவியலினாலே யாராய்ந்துரைக்குங்கா லல்லவி யல்லையுடையகொடையாற் செல்வநுகர்ச்சியும், தவ த்தாற்சுவர்க்கநுகர்ச்சியைப்பெறுவதும், மெய்யுணர் ச்சியால்வீடு மென்றுநாட்டுக-எ-று. (௩௬)

மயிர்வனப்புங்கண்கவருமார்பின்வனப்பு
மூக்கின்வனப்புங்காதின்வனப்புஞ்-செயிர்தீர்ந்த
பல்லின்வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின்வனப்பே வனப்பு.

(எ-து) தலைமயிரான்வருமழகும், கண்டார்கண்ணைக்கவருமார்பினான்வருமழகும், உகிரான்வருமழகும், காதினான்வருமழகும், குற்றந்தீர்ந்தபல்லினான்வருமழகுமெனவிவ்வைந்தழகுமொருவற்கழகல்ல - நூல்கட்குப்பொருந்திய சொல்வண்மையால்வருமழகேயழகாவது-எ-று. (௧௭)

தொழீஇயடவுண்ணார்தோழரிற்றுஞ்சார்
வழீஇயபிறர்பொருளைவௌவார்-கெழீஇக்
கலந்தபிற்கீழ்காணார்காணாய்மடவாய்
புலந்தபிற்போற்றார்புலை.

(எ-து) தொழுதகையடவுண்ணார், தோழரில்லிற் றனியேபுக்குறங்கார், பிறர்பொருளைமறந்தாகிலும் வெளவிக்கொள்ளார், மருவிச்சிலரோடுநட்டபின்பு கீழ்மைக்குணத்தையாராயார், மடவா யாராய்ந்துபாராய் சிலரொடுபகைத்தபின்பு கீழ்மைக்குணத்தைப்போற்றாதுவஞ்சித்துக்கெடுப்பார்-எ-று. (௧அ)

பொய்யாமைநன்றுபொருணன்றுயிர்நோவக்
கொல்லாமைநன்றுகொழிக்குங்கால்-பல்லார்முன்
பேணாமைபேணுந்தகைசிறிதெனினு
மாணாமைமாண்டார்மனம்.

(எ-து) பிறர்க்குப் பொய்சொல்லாமை நன்று பொருளுண்டாக்குதனன்று, பிறிதோருயிரையுந்தன்

புறக்கொல்லாமைநன்று, ஆராயுங்காற் றூம்விரும்புவ வைபலரறியவிரும்பாமைநன்று, மாட்சிமைப்பட்டதவ சிகள் சிறிதாயினு மீனவாழ்க்கையின்கண் மீள்கைக் கு மாறுதொழிகை நன்று-எ-று. (ந௯)

பண்டாரம்பல்கணைக்குக்கண்காணிபாத்திலா
ருண்டாரடிசிலேதோழுனிற்-கன்டாரா
யாக்கைக்குத்தக்கவறிவில்லார்க்காப்படுப்பிற்
காக்கைக்குக்காப்படுத்த சோறு.

(எ-து) பண்டாரத்தினையும், பல்கணைக்கினையு ம், கண்காணியையும், தன்கோயிலுளுறையுமங்கைய ரையும், தனக்காக்குமுணவினையும்பகுத்துமக்கள்யா க்கைகுத்தக்கவறிவில்லாதானாயுந் தன்றோழனைப்போ லக்கொண்டுதேறிக்காக்காவிடி னக்காவல்காக்கையைச் சோறுகாக்கவிட்டதனோடொக்கும்—எ-று. (௪௦)

உடையிட்டார்புன்மேய்வாரோடுநீர்புக்கார்
படையிட்டார்பற்றேனுமின்றி-நடையிட்டா
ரிவ்வகையவரையு மென்றுமனுகாரோ
செவ்வகைச்சேவகர் சென்று.

(எ-து) தமக்கஞ்சியுடுத்த புடைவையைப்போக விட்டார், புல்லினைப்பறித்துவாயிலிட்டாரோடு, நீரின்க ட்புக்கார், கைப்படைதுறந்தார், மற்றோரரணின்றி யோடமாட்டாது நிலைதளர்ந்திருந்தார், இவ்வெற்றிய

ட்டவைவளையுமொருநாளுந்தீங்குசெய்யச்சென்றணு
கார் அறம்பொருள்செய்யுஞ்சேவகர்—எ-று. (௬௧)

பூவாதாள்பூப்புப்புறக்கொடுத்தாளிலிங்கி
யோவாதாள்கோலமொருபொழுதுங்-காவாதாள்
யார்யார்பிறர்மனையாளுள்ளிட்டிவ்வைவரையுஞ்
சாரார்பகைபோற் சலித்து.

(எ-து) பூப்பில்லாதகன்னியும், பூப்புத்தவிர்ந்தா
ளும், தவத்திற்புக்கலிலிங்கியும், கோலஞ்செய்கையொ
ருபொழுதுமோவாளாதிக்கற்புக்காவாதகணிகையும், பி
றர்யாவர்க்குரியமனையாளுமுள்ளிட் டிவ்வைவரையுஞ்
சாரார்பகைபோலவேறுபட்டு—எ-று. (௬௨)

வருவாய்க்குத்தக்கவழக்கறிந்துசுற்றம்
வெருவாமைவீழ்விருந்தோம்பித்-திருவாக்குந்
தெய்வதையுமெஞ்ஞான்றுந்தேற்றவழிபாடு
செய்வதேபெண்டீர் சிறப்பு.

(எ-து) தமக்குள்ளபகுதியினளவறிந்து அதற்கு
த்தக்கபோக்கறிந்து,சுற்றத்தைவெருவாமைத்தழுவி,
விருந்துபுரந்து, திருவினையாக்குந்தெய்வத்தைவழிபா
டுசெய்க. இவ்வைந்துதொழிலும் பெண்டிர்க்குச்சிறப்
பானவை—எ-று. (௬௩)

நாள்கூட்டமூர்த்தமவற்றோடென்றாய்க்
கோள்கூட்டம்யோகங்குணனுணர்ந்து-தோள்கூட்ட

லூற்றானுமல்லானுமைந்துமுணர்வானாற்
பெற்றானாட்கொள்க பெரிது.

(எ-து) நாள்பொருந்துதலும், மூர்த்தமும், நன்றாய்க்கோள்கூடுதலும், அமிர்தயோகமுதலாயினயோகமும், இவற்றினான்வருநன்மையுமாராய்ந்துணர்வானாட்பெற்றாலங்ஙனேநன்றென்றுகொள்க, ஒருவனேயொருத்தியைக்கூட்டலுற்றவனு மற்றுஞ்சிலநன்மைக்காரியஞ்செய்யலுற்றவனும்—எ-று. (உச)

பேணடக்கம்பேணாப்பெருந்தகைமைபீடுடைமை
நாணொடுக்கமென்றைந்துநன்றாய்ப்-பூணொடுக்கம்
பொன்வரைக்கோங்கேர்முலைப் பூந்திருவேயாயினுந்
தன்வரைத்தாழ்த்தலரிது.

(எ-து) சுற்றத்தாரைப்பேணலும், அடக்கமுடைமையும், பிறனொருவனைப்பேணாதபெருந்தகைமையும், ஒப்புரவுமுதலாயுள்ளபீடுடைமையும், நாணால்வருமொடுக்கமுமென்றுசொல்லப்பட்ட வைந்தினையும் பொருந்தாதுதன்கொழுநனைத்தன்வரைத்தாழ்த்தலரிது, பொன்வரைக்கோங்கேர்முலைப்பூந்திருவேயாயினும்-எ-று.)

வார்சான்றகூந்தல்வரம்புயரவைகலும்
நீர்சான்றுயரவேநெல்லுயருஞ்-சீர்சான்ற
தாவாக்குடியுயரத் தாங்கருஞ்சீர்க்கோவுயர்த்
லோவாதுரைக்கு முலகு.

(எ-து) வார்சான்றகூந்தலையுடையாய், வயலினது வரம்புயரவே, வைகலு நீருயர்ந்து, நாடோறுநெல்லுய ரும்,சீரமைந்தகெடாதகுடியுயரவே,பகைவராற்றுங்கு தற்கரிய சீர்மையையுடைய மன்னுயருமென்றொழியா தேசொல்லாநிற்குமிவ்வுலகம்—எ-று. (சசு)

அழியாமையெத்தவமுஞ்சார்ந்தாரையாக்கல்
பழியாமைபார்த்தல்யார்மாட்டு-மொளியாமை
கன்றுசாவப்பால்கறவாமைசெய்யற்க
மன்றுசார்வாக மனை.

(எ-து) யாதானுமொருதவத்தை யழியாமையும், தம்மையடைந்தாரையாக்குதலும், பிறர்தம்மைப்பழி யாமை யாவர்மாட்டுமொளியாமைப்பகுத்துண்டலும், கன்றுசாவப் பால்கறவாமையும், மன்றருகுமனை யெ டாமையுஞ்செய்க-எ-று. (சஎ)

நசைகொல்லார்நச்சியார்க்கென்றுங்கிளைஞர் (லெரர்
மிசைகொல்லார்வேளாண்மைகொலலா - ரிசைகொ
பொன்பெறூஞ்சுணங்கின்மென்முலையாய்நன்கு
ணொன்பெறினுங்கொல்லா ரியைந்து. (ணர்ந்தா

(எ-து) தம்மை நச்சியாருடைய நசையையெ ஞ்ஞான்றுங்கொல்லார், தங்கிளைஞர்மிசையுமிசையை க்கொல்லார்,உபகாரத்தைக்கொல்லார், புகழைக்கொல் லார்,பொன்போலும்பூஞ்சுணங்கின்மென்முலையாய்மி

கவுமுணர்ந்தா ரெல்லாவின்பம்பெற்றாராயினும்பிற
ரோருயிரினைமேவிக்கொல்லார்-எ-று. (சஅ)

நீண்டநீர்காடுகிளர்நிவந்துவிண்டோயு
மாண்டமலைமக்களுள்ளிட்டு- மாண்டவ
ராய்ந்தனவைந்து மாறுவுடையானை
வேந்தனாநாட்டல் விதி.

(எ-று) மிக்கநீரும், காடும், சேறும், கிளர்ந்து விண்டோயுமாண்டமலையும், தீயுடைமக்களுமகப்பட்ட வாய்ந்துசொல்லப்பட்டவைந்தாறுந்தனக்கரணாக வுடையானை வேந்தனா நாட்டத்தகும். (சகூ)

பொச்சாப்புக்கேடுபொருள்செருக்குத்தான்கேடு
முற்றாமைகேடுமுரண்கேடு-தேற்றத்
தொழின்மகன்றன்னோடுமாற்றாயினென்று
முழுமகற்குக்கேடி வை.

(எ-று) கடைப்பிடியில்லாமைகேடு, பொருண் மிகவுடைமையாற் களிக்குங்களிப்புக்கேடு, தானறிவு முதிராமைகேடு, பிறரொடுபகைகோடல்கேடு, தெ ளியத்தனக்குத் தொழில்செய்யுமகனோடுமாறுபட்டுச் சீறுவனாயினுமழிவினால் வாழுமகற்குக்கேடாய்விடும்-( )

கொல்லாமைநன்றுகொலைதீதெழுத்தினைக்
கல்லாமைதீதுகதந்தீது-நல்லார்

மொழியாமைமுன்னே முழுதுங்கிளைஞர்
பழியாமைபல்லார் பதி.

(எ-து) ஒருயிரைக்கொல்லாமை நன்று, கொலை தீது, எழுத்தினைக்கல்லாமைதீது, பிறரைவெகுளல் தீது, அறிவுடையார்தமக்கு மொழிவதற்குமுன்னேயும் பழியாதவழியொழுகுவான்பலர்க்குமிறைவனாவான்—எ-று. (௫௧)

உண்ணாமைநன்றவாநீக்கிவிருந்துகண்மா
றெண்ணாமைநன்றிகழ்தீகெளியா-ரெண்ணி
னரியராவார்பிறரிற்செல்லாரோயுண்ணார்
பெரியராவார்பிறர்கைத்து.

(எ-து) அறந்தவாநீக்கியுண்ணாது நோற்றனன்று, மனைவாழ்க்கையின்கணறிவராயின் விருந்தினைக்கண்மாறுதனினையாமைநன்று, தமக்கெளியாரையிகழ்ந்துரைப்பாராயிற்றீதாம், ஆராயிற் பெறுதற்கரியராவார் பிறர்மனையாளைவிரும்பியொழுகாதார், பெரியராவார்பிறரையிரந்துண்ணாதார்-எ-று. (௫௨)

மக்கட்பெறுதன்மடனுடைமைமாதுடைமை
யொக்கவுடனுறைத லூணமைவு-தொக்க
வலவலையல்லாமைபெண்மகளிர்க்கைந்து
தலைமகனைத்தாழ்க்குமருந்து.

(எ-து) தான்மக்களைப்பெறுதல், அடக்கமுடை
மைஅழகுடைமை,அவனினைவிற்கொக்கவுடனொழுகு
தல்,அவனுள்ளனுமுனைவிற்கு விரும்புதலெனவித்தொ
க்கவைந்துகுணனும்பிறளையொத்தலேதனக்கொழுக்க
மாக வுடையவளல்லளாயிற் றங்கொழுநனைத்தம்பாற்
பெண்டீர்வணக்கு மருந்தாவள்-எ-று. (௫௩)

கொண்டான்கொழுநனுடன்பிறந்தான்றன்மாமன்
வண்டார்பூந்தொங்கன்மகன்றந்தை-வண்டாரா
யாப்பார்பூங்கோதையணியிழையைநற்கியையக்
காப்பார்கருதுமிடத்து.

(எ-து) தன்னைக்கொண்டகொழுநனும்,உடன்பிற
ந்தானும், மாமனும்,வண்டார்பூந்தொங்கல்மகனும்,தந்
தையுமெனவிவ்வைவரும்யாப்பார்பூங்கோதை யணியி
ழையைமிகவுஞ்செறியக்காப்பார்கள்வண்டாராய்-எ-று

ஆம்பல்வாய்கண்மனம்வார்புருவமென்றைந்து
தாம்பல்வாயோடிநிறைகாத்த-லோம்பார்
நெடுங்கழைநீண்மூங்கிலெனவிகழ்ந்தாராட்டுங்
கொடுங்குழைபோலக்கொளின்.

(எ-து) பல்லும்,வாயும்,கண்ணும், மனமும்,பு
ருவமுமாகிய வுறுப்பைந்தையுங்கண் டரிவையர்க்கண்
பாய்த் தாம்பல்விடங்களினுடித்தங்கணிறையைக்காக்
கமாட்டாதார் குவளையையுந்தாமரையு மசைவிக்கின்ற

காதிற்கொடுங்குழையையுடைய வரிவையை நெடிதா ய்த்திரண்டநீண்மூங்கிலைப்போலக்கருதி யிகழ்வாராயி னவர்க்குநிறைகாக்கலாம்-எ-று. அரிவையைமூங்கில் போலக்கொண்டிகழ்தலாவது மூங்கிலினுள்ளமுத்த வள்பல்லாகவும், மூங்கிலின்குழலவள்வாயாகவும்,மூங் கிலின்கண்ணவள்கண்ணாகவும், மூங்கிலின் பொய்ப்ப ட்டவுள்ள மவள்மனமாகவும், மூங்கிலின்வில்லவள்பு ருவமாகவும் கொண்டிகழ்தல். இவ்வகைக்கருதலவ்வரி வையே லன்புநிகழாதெனக்கொள்க. (ருரு)

பொன்பெறுங்கற்றான் பொருள்பெறுநற்கவி
யென்பெறும்வாதியிசைபெறு-முன்பெறக்
கல்லார்கற்றாரினத்தல்லார்பெறுபவே
நல்லாரினத்து நகை.

(எ-து) கற்றுவல்லவன்பொன்னைப்பெறும், ந ற்கவிசெய்யவல்லவ னரசனாலே யெல்லாப்பொருளும் பெறும், வாதம்பண்ணிவெல்லவல்லவன் யாதுபெறு மெனின்வென்றானென்னும்புகழைப்பெறும்,முன்னே யிளமைக்காலத்திலேகல்லாதாரும், கற்றுவல்லாரினத் தல்லாதாருநல்லாரினத்திடையே யிகழ்ச்சிபெறுவர்— எ—று. (ருசு)

நல்லவெளிப்படுத்துத்தீயமறந்தொழிந்
தொல்லையுயிர்க்கூற்றங்கோலாகி-யொல்லுமென

மாயம்பிறர்பொருட்கண்மாற்றுகமானத்தா
ஞயினழித லறிவு.

(எ-து) பிறர்செய்த நன்மைகளைவெளிப்படப்பண்ணி, பிறர்செய்ததீமைகளைநினையாது மறந்தொழிந்து, பிறவுயிர்கட்கிடையூறுவந்தா லவ்வுயிர்கட்கு விரைந்தூற்றங்கோலாகி, தனக்கியலுமாகிம் பிறர்பொருட்கள்வஞ்சனையைத்தவிர்ந்து, பெரியமானங்காத்தற்பொருட்டாகத்தான் சாதலைக்கறிவதாராயின்-எ-று.

தன்னிலையுந்தாழாத்தொழினிலையுந்துப்பெதிர்ந்தா
ரின்னிலையுமீடிலியனிலையுந்-தன்னி
யைந்தறிந்துசெய்வானரசமைச்சன்யாதும்
பெயர்ந்தறியும்பேராற்றலான்.

(எ-து) தன்னுடைய நிலைமையினையும், தாழ்வின்றித்தான்றொடங்கிச்செய்யும்வினையது நிலைமையினையும், வலியிலருந்தன்னுடனெதிர்ந்தமாற்றார்மாட்டுள்ள வலியநிலைமையினையும், கேடில்லாதவுலகுவழக்கு நிலைமையினையு முன்புக்காராய்ந்தறிந்துசெலுத்துவானரசனுவான், அந்நான்குமன்றிமற்றுமெல்லாம்வேறுபடுத்தறியும்பெரியவாற்றலையுடையானமைச்சனுவான்-எ-று.

பொருள்போகமஞ்சாமைபொன்றுங்காற்போந்த
வருள்போகாவாரமென்றைந்து-மிருடீரக்
கூறப்படுங்குணத்தான் கூர்வேல்வல்வேந்தனுற்
றேறப்படுங்குணத்தினன்.

(எ-து) பொருளும், இன்பமும், இடுக்கண்வந்தாலஞ்சாமையும், பிறிதோருயிர்பொன்றவந்தவிடத்துமிக்கவருளும், நீங்காதவரியவறமுமென்றுசொல்லப்பட்டவிவ்வைந்துங் குற்றந்தீரச்சொல்லப்படுங்குணத்தான் கூர்வேலவல்லவேந்தனொருகருமத்தினைக்கணின்றுய்த்துத் தேறப்படுங்குணத்தினான் — எ-று. (ருகூ)

நன்புலத்துவையடக்காளுமாடோபோற்றிப்
புன்புலத்தைச்செய்தெருப்போற்றியபி-னின்புலத்த
பண்கலப்பையென்றிவைபாற்படுப்பானுழவோன்
நுண்கலப்பை நூலோதுவார்.

(எ-து) விளைபுலத்தினுள்ளவைக்கோலினைத்தன்பாலுள்ளதாகத்திரட்டி, நாடோறுமுழும்பகடுகளைப்பாதுகாத்து, புன்புலத்தைநன்புலமாகத்திருத்தி, எருவினாலதனைப்போற்றியபின்பு, பண்ணுங்கலப்பைகளைநன்புலத்தின்கட்பகுதிப்படுப்பானுழவனாமென்றுசொல்லுவர்நுண்ணியவுழவுநூலோதியவறிவார் — எ-று

ஒலாமைநன்றீதறீதுடன்பில்லார்க்குச்
சாலாமைநன்றுநூல்சாயினுஞ்-சாலாமை
நன்றுதவநனிசெய்ததெனையானா
யின்றுகாரியாங்கண்டிலம்.

(எ-து) ஒருவர்மாட்டுச்சென்றிரந்தேலாமையுநன்று, துணையில்லார்க்கொண்டுறவிதலுங்கிது, குணயி

ல்லாதார்க்கு நூல்பிரம்பவறிவியாமையும்நன்று,ஒருவன் சால்புடையனல்லாமைநன்று, மிகத்தவஞ்செய்தனன் றன்றென்று தாஞ்சாயினுஞ்சொல்லுவாரையின்றளவு ம்யாங்கண்டிலேம்-எ-று. (௯௧)

அரம்போற்கிளையடங்காப்பெண்வியக்கத்தொண்டு
மரம்போன்மகன்மாறாய்நின்று-கரம்போலக்
கள்ளநோய்காணுமயலைந்துமாகுமே
யுள்ளநோய்வேண்டாவுயிர்க்கு.

(எ-து) அரம்போலத் தன்னைத்தேய்க்குங்கிளையு ம், தனக்கடங்காத மனைவியும், அடங்காதனவேசெய்யு ந்தொழும்பும், அறிவில்லாததன்புதல்வனும், மாறாய்த்த மக்கிடமாய்நோயைச்செய்யுமயலிருப்புமென விவ்வை ந்துமுளவாயினுயிருடையாருள்ளத்திற்கு மற்றுநோய் வேண்டா-எ-று. (௯௨)

நீரறநன்றுநிழனன்றுதன்னில்லுட்
பாரறநன்றுபார்த்துண்பானேற-பேரற
நன்றுதளிசாலை நாட்டற்பெரும்போக
மொன்றுமாஞ்சாலவுடன்.

(எ-து) நீரறஞ்செய்தனன்று, நிழலறஞ்செய் தனன்று, தன்மனையுட்பிறருறைய விடங்கொடுத்தன ன்று, பகுத்துண்பானுயிற்பேரறநன்று, தளியுஞ்சாலைநி லைபெறச்செய்தல்நன்று இவ்வைந்துஞ்செய்தார்க்குப் பெரும்போகம் பொருந்தும்-எ-று. (௯௩)

பிடிப்பிச்சைப்பின்னிறையையங்கூழ்கூற்றோ
டெடுத்திரந்தவுப்பித்துணையோ-டடுத்து
சிறுபயமென்னார்சிதவலிப்பீவார்
பெறுபயன்பின்சாலப் பெரிது

(எ-து) ஒருபிடியுளடங்கும் பிச்சை, விரலிறையு ளடங்கும் பிச்சை, உண்டோவில்லையோவென்றையப் படும் பிச்சை, கூழ்வார்த்தல், ஒருவன்சொல்லோடெடு த்திரந்தவுப்பித்துணையும் பொருந்தியபயன்சிறியவெ ன்றுகருதாராய்ச் சிதவலிப்பினையீவார், பின்புபெறும்ப யன் மிகப்பெரிது—எ-று. (௩௨)

வெந்தீக்காணவ்வெண்ணெய்மெழுகுநீர்சேர்மண்ணு
வந்தன்மகற்சார்ந்ததந்தையென்-றைந்தினும்
மொன்றுபோலுண்ணெகிழ்ந்தீயிற்சிறிதெனினுங்
குன்றுபோற்கூடும் பயன்.

(எ-து) வெவ்வியதீயைக்கண்ட வெண்ணெயும், மெழுகும், நீர்சேர்ந்தமண்ணும், உப்பும், தன்னழகிய குளிர்ந்த மகனைத்தழுவிய தந்தையுமென்றுசொல்லப் பட்ட வைந்தினுமொன்றுபோலேயிரவலரைக்கண்டா லுண்ணெகிழ்ந்தீய்தலையந்தபொருள் சிறிதாயினு ம தனால் வரும்பயன் குன்றுபோலப் பெரிதாய்க்கூடும்- எ-று. (௩௩)

குளந்தொட்டுக்கோடுபதித்துவழிசீத்
துளந்தொட்டுழுவயலாக்கி-வளந்தொட்டுப்
பாகுபடுங்கிணற்றோடென்றிவ்வைம்பாற்படுத்தா
னேகுஞ்சுவர்க்கத்தினிது.

(வ-து) குளத்தைக்கல்லி, மாக்காவைநட்டு, வழி செய்துதிருத்தி மேடாயினநிலங்களை யுட்டோண்டி யுழுவயலாக்கி, வளம்படத்தோண்டி, வகுப்புப்படகி ணற்றொடுசொல்லப்பட்டவிவ்வைந்தும் பகுதிபடச் செய்தான் சுவர்க்கத்திற்செலலுமோரிடையூறின்றி— எ-று. (௬௬)

போர்த்துமுரிந்திட்டும்பூசியுநீட்டியு
மோர்த்தொருபான்மறைத்துள்ளான்றே- யோர்த்த
வறமாமேற்சொற்பொருக்கவன்றேற்கலிக்கட்
டுறவறம்பொய்யில்லறமேவாய்.

(எ-து) முழுமெய்யுந்தோன்றாமற்போர்த்தும், உடுத்தவுடையைக்களைந்தும், உடம்படையநீறுபூசியும், சடையை நீட்டியும், உடம்பிலொருகூற்றினைமறைத்தும் உண்டற்கு மேவியாராய்ந்துகொண்டன விவ்வேடங்களைந்தும் பண்டுள்ள நல்லோர்சொல்லியதுறவறமே துறவறமாயிற் றோர்சொல்லியகடுஞ்சொற்களைப் பொருக்கப்பொருளாயிற் கலிகாலத்திலங்க ளிகழுந்துறவறம் பொய்யாம் இவ்வறமெய்யிலவது—எ-று. (௬௭

தான்பிறந்தவில்லினைந்துதன்னைக்கடைப்பிடித்துத்
தான்பிறராற்கருதற்பாடுணர்ந்து-தான்பிறரால்
சாவவெனவாழான் சான்றோராற்பல்யாண்டும்
வாழ்கவெனவாழ்த னன்று.

(எ-று) தான்பிறந்த குடியை நினைத்து, தன்னையொழுக்கத்தின்வழுவாதலைகைக் கடைப்பிடித்து, தான்பிறரால் மதிக்கப்படுஞ்செய்கையையுணர்ந்து, தான்பிறராற்சாகவென்று சொல்லும்படி யொழுகாது, சான்றோராலேபல்யாண்டும் வாழ்வாளுக என்றுசொல்லும்படியொழுகுதனன்று-எ-று. (௬௪)

கெடுக்கல்குறுக்கல்துறைநீர்நீடல்
வடுத்தீர்பகல்வாயுறையே-வடுத்தீரா
வாகுமங்கான்கொழித்தைகடக்குவாளுகின்
வேகும்பம்வேண்டா விடும்.

(எ-று) மயிரைச்சடையாகநீட்டுதலும், மயிரைக்குறைத்தலும், தீர்த்தங்களெடிதாகப்போ யாடுதலும், வடுத்தீர்ந்தபகலின்கண் ணுண்ணுதலென்கின்றகுற்றந்தீராவாகின்றவங்கான்கினையுமொழித்தலும், ஐந்துபுலன்களையுமடக்குவாளுகிற் சுடலைத்தியுள்வேகக்கடவ கும்பமாகியவுடம்பினை வேண்டான்விடும்-எ-று(௬௬

கொன்றான்கொலையையுடன்பட்டான்கோடாது
கொன்றதனைக்கொண்டான் கொழிக்குங்கால்

கொன்றதனை,யட்டானிடவுண்டானைவரினுமாகுமெ
கட்டெறிந்தபாவங் கருது. [லைக்

(எ-து) உயிரைக்கொன்றவன், கொலைக்குக்கோடாதேயுடன்பட்டவன், கொலைப்பட்டதனுடையவூனைக்கொண்டவன், ஆராயுங்காற்சொல்லப்பட்டதனுடைய வூனையட்டான், அதனையிடவுண்டானென விவ்வைவர் மாட்டுமுளவாய்நிகழுமென்று வரம்பழித்துச்செய்தபாவத்தைக்கருது-எ-று. (௭௦)

சிறைக்கிடந்தார்செத்தார்க்குநோற்பார்பலநா(ட்
ளுறைக்கிடந்தாரொன்றிடையிட்டுண்பார்- பிறைக்கீ
முற்றனைத்துமுண்ணாதவர்க்கீய்ந்தார்மன்னவராய்க்
கற்றனைத்தும்வாழ்வார்கலந்து.

(எ-து) சிறையின்கட்கிடந்தார்,செத்தவர்க்குநன்மைவேண்டியுண்ணாது நோற்பார், பலநாளுந்தாங்கொண்டபிணிக்குமருந்தாயுண்ணாதுகிடந்தார், ஒருநாளிடையிட்டுண்பார், பிறைக்கிடந்துநிரம்புமளவு முண்ணாததபசிகளென விவ்வைவர்க்குமுணவுகொடுத்தவர்களனைத்துநூல்களுங்கலந்துகற்றமன்னராய்வாழ்வார்-எ-று. (௭௧)

ஈன்றெடுத்தல்சூல்புறஞ்செய்தல்குழவியை
யேன்றெடுத்தல்சூலேற்றகன்னியை-யான்ற

வழிந்தாளை யில்வைத்தல் பேரறமாவற்ற
மொழிந்தார்முது நூலார் முன்பு.

(எ-து) ஈன்றதாய் குழவியைத்துறவாதோம்பி வளர்த்தல், தான்கொண்ட சூலைத்தாளழியாது புறஞ்செய்தல், வளர்ப்பாரில்லாதகுழவியைக்கண்டாலேன்று வளர்த்தல், சூலேற்றகன்னியையும், அழிந்தமனையாளையுநீக்காது தன்னில்வைத்துப்புறந்தருதல் என இவ்வைந்தும்பெரியவறமாகமிகவுமொழிந்தார் முதியநூலையுடையார் பண்டு-எ-று. (எ௨)

வலியழிந்தார்மூத்தார்வடக்கிருந்தார்நோயால்
நலியழிந்தார்காட்டறைபோய்நைந்தார்- மெலிவொ
டின்னவராமென்றாராய்ந்தவொருதுற்று (ழீய
மன்னவராச்செய்யுமதித்து.

(எ-து) வலிகெட்டவர், மூத்தவர், வழிபட்டுண்ணுது வடக்கிருந்தார், பிணியாலைவையப்பட்டழிந்தார், தமமுடையனாவிட்டுப்போய்த்தளர்ந்தாரென இவ்வகைவரும் தளர் வொழியும்படி யுற்றாரயலாரென்றாராயா தேயீயப்பட்டவோருணவு மன்னவராகச்செய்யுமதித்து-எ-று. தூற்றுணவு. (எ௩)

கலங்காமைகாத்தல்கருப்பஞ்சிதைத்த
விலங்காமைபேரறத்தாலீற்றம்-விலங்காமைக்

கோடல்குழவிமருந்துவெருட்டாமை
காடினறம்பெருமைநாட்டு.

(எ-து) வயிற்றுட்கருவழியாமை காத்தலும், கருப்பஞ்சிதைந்தாற் பிறர்க்கு வெளிப்படாமைமறைத்துப் பெயர்த்து வாங்குதலும், குழவியையிடையிலங்காக்க படியியற்றிக்கோடலும், குழவிபிறந்துப்பிணிகொண்டாலதற்குமருந்தும், அக்குழவியையச்சமுறுத்தாமையுமென்னு மிவ்வைந்தினையும்பெரிதாயவறமாகநாட்டுவாராக-எ-று. (எச)

சூலாமைசூலிற்படுந்துன்பமீன்றபி
னேலாமையேற்றால்வளர்ப்பருமை-சால்பவை
வல்லாமைவாய்ப்பவறிபவருண்ணாமை
கொல்லாமைநன்றற்கொழித்து.

(எ-து) சூற்கொளாமையால்வருந்துன்பம், சூற்கொண்டால் வருவதொருமெய்வருத்தம், பிள்ளைப்பெற்றுவைத்துப்பிள்ளையைக்கொள்ளாமை, பிள்ளையைப்பெற்றுக்கொண்டால் வளர்க்குமருமை, வளர்ந்தபிள்ளை சால்புகுணங்களை மாட்டாமை, இவ்வைந்தினையும் வாய்ப்பவறிந்தவராராய்ந் தோருயிரைக்கொல்லாமையுமவ்வூனை யுண்ணாமையுநன்று-எ-று. (எரு)

சிக்கர்சிதடர்சிதலைப்போல்வாயுடையார்
துக்கர் துருநாமர்தூக்குங்காற்-றெக்க

வருநோய்கள் மூன்றினுந் தீர்த்தாரே யின்று
மொருநோயு மின்றுவாழ்வார்.

(எ-து) தலைநோயுடையாரையும், பித்துற்றாரையும், வாய்ப்புற்றுடையாரையும், கயநோய்கொண்டாரையும், மூலநோய்கொண்டாரையும் அடைந்துவருந்துன்பங்களை முற்பிறப்பிற்றீர்த்தவர்க ளிப்பிறப்பின்கணொருநோயுமின்றி வாழ்வார்-எ-று. (எசு)

பக்கம்படாமையொருவர்க்குப்பாடிற்ற
தக்கம்படாமை தவமல்லாத் - தக்கா
ரிழிஞர்க்கேயானும்பசித்தார்க்கணீதல்
கழிசினங்காத்தல் கடன்.

(எ-து) எல்லாவுயிர்க்கு மொத்தலும், படுந்துன்பமாற்றுதலும், ஒருபொருளின்கணனும் பற்றுப்படாமையும், இம்மூன்றுந்தவஞ்செய்வார்க்குணமாவன, அவர்களல்லாவில்வாழ்வார்க்குக்குணமாவன, இழிக்குலத்தார்க்கேயாயினும் பசித்தார்க்குணவுகொடுத்தலும், மிக்கவெகுளிகாத்தலும்-எ-று. (எஎ)

புண்பட்டார்போற்றுவாரில்லாதார் போகுயிரார்
கண்கெட்டார்காலிரண்டுமில்லாதார் - கண்கண்பட்
டாழ்ந்துநெகிழ்ந்தவர்க்கீய்ந்தார்கடைபோக
வாழ்ந்துகழிவார்மகிழ்ந்து.

(எ-து) போரின்கட்புகுந்துபுண்பட்டார், பாது
காக்குங்களைகணில்லாதார், உயிர்போந்தன்மையையு
டைந்தோர், குருடர், மூடவரென்றுசொல்லப்பட்டாரு
டையகண்ணிலே தங்கள்கண்கள்பட்டிரங்கி மனமெ
கிழ்ந்து வேண்டுவனகொடுத்தா ரிடையூறுபட்டொழி
யாதே கடைபோகமகிழ்ந்துவாழ்ந்துபோவார்-எ-று-க
ளைகண்-புகல். (௭௮)

பஞ்சப்பொழுதுபாத்துண்பான்காவாதா
னஞ்சாதுடைப்படையுட்போந்தெறிவா-னஞ்சாதே
புண்பதுமீவான்குழவிபலிகொடுப்பா
னெண்பதிற்றின்மேலும்வாழ்வான்.

(எ-து) சிறுவிலைக்காலத்து பலர்க்கும்பகுத்து
ண்பான், தன்மாட்டுள்ளபொருள்காவாது பிறருக்கே
யீவான், படையுடைந்தவிடத்துத்தானஞ்சாதே வரு
கின்றபடையையெதிர்ந்து மீட்டும்பலரையுமுய்யக்கொ
ள்வான், ஒருநாளுமொழியாதேதகாதனவென்பதனைமுன்னே
பிறர்க்கீயதுவென்பான், பசித்தகுழவிகட்குப்பலிகொ
டுப்பான், எண்பதிற்றியாண்டின்மேலுந்துன்புறுதுவாழ்
வான்-எ-று. (௭௯)

வரைவில்லாப்பெண்வையார்மன்னைப்புற்றேறார்
புரையில்லார்நள்ளார்போர்வேந்தன்-வரைபோற்
கடுங்களிறுவிட்டூழிச்செல்லார்வழுக்கார்
தொடும்புலிகோட்குவழி.

(எ-று) பொதுமகளிரைத் தமக்கு மனையாளாக மனை யின்கண் வையார், பழையதாய்த் தலைமயங்கியிருந்த பு ற்றின்மேலேறார், தம்மோடு மிகப்பொருவாதாரோடு கட் புக்கொள்ளார், போர்வேந்தனுடைய வரையோடுங்க லிங்களிறுவிட்டுப்போய்ச்செல்லார், கொடிய புலிவாழுமுழை யின்க ணடவார்-எ-று. (௪0)

தக்கார்வழிகெடாதாகுந்தகாதவ
ரொக்கவழியாயொல்குவர்-தக்க
வினைத்துறைக்கும்பழியும்புகழு
மனத்தினாகு மதி.

(எ-று) தகுதியையுடையார் வழிமரபுகெடாதா கும், தகுதியில்லாதார்கெட்டவழிமரபையுடையராமே தளர்வார், பழிக்கத்தக்கவினைத்துறைக்கும்பழியும், புக ழுக்குத்தக்கவினைத்துறைக்கும்புகழும், தனதுமனத்தி னளவேயுண்டாகும் அறிவும்-எ-று. (௪௧)

கழிந்தவைதானிரங்கான்கைவாரா நச்சா
னிகழ்ந்தவையின்புறானில்லார்-மொழிந்தவை
மென்மொழியாலுள்ளநெகிழ்ந்தீவானெவ்விடத்து
மின்மொழியாலேத்தப்படும். (மெஞ்ஞா

(எ-று) இறந்தபொருட்குத்தானிரங்கான், தன க்குக்கைவாராதனவற்றைநச்சுறாதான், கல்லாரானி கழப்பட்டனவற்றையின்புறான், வறியார்க்குவேண்டு

னவற்றை யென்மொழிசொல்லி, யுண்மையிற்றிவா ரூயிற்றேவர்களாலினியமொழிகளாலே புகழப்படும் எ-று. இதனுள்மென்மொழிசொல்லுதலு மீதலுமென விரண்டாகக்கொள்க. (அஉ)

காடுபோற்கட்டினியவில்லம்பிறர்பொரு
ளோடுபோற்றாம்பிறந்ததா-யூடுபோய்க்
கோத்தின்னுஞ்சொல்லானுக்கொல்லானேற்பல்லவ
ரேத்திநூலென்னகுறை.

(எ-து) பிறருடையகண்ணுக்கினியவில்லத்தை க்காடுபோலக்கொண்டுவிரும்பாது, பிறருடையபொரு ளையோடுபோலக்கொண்டுவிரும்பாது, பிறர்மனையாளை த்தான்பிறந்ததாயாகக்கொண்டுவிரும்பாது, பிறருடு போய்க்கோத்தின்னாதவற்றைச்சொல்லாதுஉயிரை யுங்கொல்லாதாயினல்லார் பலருஞ்சொல்லிய நூல்களா ற்காரியமென்னையவர்க்கு-எ-று. (அங.)

தோற்கன்றுகாட்டிக்கறவார்கறந்தபால்
பாற்பட்டாருண்ணார்பழிபாவம்-பாற்பட்டா
ரேற்றவாயின்புற்றுவாழ்வனவிடறியக்
கூற்றுவர்ச்செய்யார்குணர்ந்து.

(எ-து) தோற்கன்றுகாட்டிப்பசுவைக்கறவார், அ ப்பெற்றியாற்கறந்தபாலே கெடுப்பட்டாருண்ணார், ப ழியையும், பாவத்தையும் தம்மேலேற்றுக்கொண்டு

விரும்பாதே, தன்னிணையோடின்புற்று வாழுமுயிர்களை க் கூற்றுவிரும்பக்கொணர்ந்து கொலைசெய்யார்-எ-று. இதனுட்பாற்பட்டாரென்பதனை யைந்துபொருள் மே லுங்கொள்க. (௮௪)

நகையொடுமந்திரநட்டார்க்குவாரம் (மு
பகையொடுபாட்டுரையென்றைந்துந்-தொகையொ
மூத்தோரிருந்துழிவேண்டார்முதுநூலுள்
யாத்தாரறிந்தவராய்ந்து.

(எ-து) சிரித்தலும், ஒருவனோடுசெவிச்சொலவு ம், தம்முற்றார்க்காகவாரஞ்சொல்லுதலும், பகையாகு தலும், பாட்டுக்குப்பொருட்சொல்லுதலும், இவ்வைந் துங்கூட்டத்தோரறிவுடையராயிருந்துழிவேண்டாராய் ப்பழையநூல்களிலேயார்த்துவைத்தா ரறிவுடையராய ந்து-எ-று. (௮௫)

வைத்தாரொருவனினிழியவாழ்த்திய
தெய்தாவுரையையறிவானே-நொய்த
வறிவறியாவாரல்லடனவுரைப்பார்வாயுட்
டறிவெறியார்தக்காரேதாம். (௮௬)

நெடியமன்னென்றாராயத்தன்
செல்வக்கணிப்பா-னிறைவயென்னும்பெற்றானேத்
செய்யமாத்தேருமாற்றோர்ந்து.

(எ-று) இராவிருக்கையென்பதொருநோன்பும், இதுபோலிப்பெற்றித்தாயவைதலையுடையநோன்பும். பனிக்குன்முழுகுதலும், குராமரத்தையுடையகுறுகாணம்போகுதலும், நோன்புகெடுதாகப்பலநாள்விடாது குளித்தலுமெனவிவ்வைந்துமுலாவிப்புடைபெயர்ந்து முயன்றுதன்துன்பங்கெடுக்கலுற்றாற்கெண்ணுறுவதல்ல. தன்னைப்பெற்றகொழுநனைத்தெய்வமாகத்தெரிவழிப்பட வல்லாராயினவ்வழிபாடேயெல்லாத்துன்பமுந்தீர்க்கும்

சத்தமெய்ஞ்ஞானந்தருக்கஞ்சமயமே (எ-று
வித்தகர்கண்டவீடுள்ளிட்டாங்-கத்தகத்
தந்தவிவ்வைந்துமறிவான்றலையாய
சிந்திப்பிற்சிட்டன் சிறந்து.

(எ-று) வழக்குநூலும், சொன்முடிபுநூலும், தருக்கநூலும், சமயநூலும், அறிவின்மிக்கார்கண்டவீட்டு நெறியும் இவ்வைந்துமழகாகவறிவான்றலையாய் சிட்டனுவான்சிறந்து-எ-று. (௩௯)

கல்லுங்காற்கண்ணுங்கனிதலேயாழ்நே
டெண்ணுங்காற்சாந்தேயிலைநறுக்கிட்-டெண்ணுங்
வீட்டவிவ்வைந்துமறிவானிடையாய (௪
சிட்டனென்றெண்ணப்படும்.

(எ-று) கருதுங்கால் கருதப்படுமெண்ணும், யாழிலும், சித்திரமெழுதவல்லனாதலுந்தொழில்பட விலை

கருக்கலுமெனவில்லைவந்துகாரியமுமறிந்துவல்லனாவா னிடையாயசிட்டனென்றெண்ணப்படுட-எ-று. (௪௪)

நாணிலனாய்நன்குநள்ளாதானாய்ப்பெரியார்ப்
பேணிலனாய்ப்பிறர்சேவகனா-யேணில
வொருந்தியபூண்முலையார்சேரிகைத்திலான்
பருத்திபகர்வுழிநாய்.

(எ-று) நாணமில்லாதானுநாயோடொக்கும், பிறரொடுநண்புகொள்ளாதானுநாயோடொக்கும், பெரியாரைப்பேணாதானு நாயோடொக்கும், பிறர்க்குச்சேவகனாய்த்திரிவானுநாயோடொக்கும், மனத்தினகணிலையில்லாத பூணையுடைய முலையார்சேரியின்கட் கைப்பொருளின்றிக்காதலாற்சென்றுதிரிவானும், பருத்தி விற்குமிடத்துச் சென்றுநிற்குநாயோடொக்கும்-எ-று.

நாணெளிதுபெண்குணநகையெளிதுநட்டானே
லேலெளிதுசேவகனேற்பெரியார்ப்-பேணெளிது
கொம்புமறைக்குமிடையாய்விழியின்மீ
தம்புபறத்தலரிது.

(எ-று) ஒருத்திபெண்குணத்தை யுடையளா யிலவனுக்குநாணெளிது,ஒருவனோடொருவனட்டாலு யினவற்குமகிழ்ந்துநகுதலெளிது, ஒருவன்சேவகனாய் னவனுக்குவலிசெய்தலெளிது, குணத்தாற்பெரிய யினவர்க்குப்பிறரைப்பேணுதலெளிது,வஞ்சிக்கொ

டைமறைக்குமிடையினையுடையாய், பலர்க்குஞ்சோறி
டுவோர்மேற்பிறாமபுபறந்துசேறலரிது. (௬௬)

இன்சொலானாகுங்கிளைமையியல்பில்லா
வன்சொல்லானாகும்பகைமைமன்-மென்சொல்லி
னாய்விலாவாருளாமவ்வருணன்மனத்தான
வீவில்லாவீடாய்விடும்.

(எ-று) ஒருவன்சொல்லு முறுதியாகியசொல்லி
னாஞ்சுற்றமுளதாகும், குணமில்லாதகடுஞ்சொற்களாற்
பகைகளுளவாம், பிறர்க்குச்சொல்லுமெல்லியசொல்லி
னாற்றளர்வில்லாதவாருளதாம், அவ்வருளாலொருவ
ன்மனநன்மையால், அம்மனநன்மையாற்கேடில்லாத வீ
டாய்விடும்-எ-று, (௬௭)

தக்கதிளையான்றவஞ்செல்வனூண்மறுத்த
றக்கதுகற்புடையாள்வனப்புத்-தக்க
தழற்றன்னென்றோளாளறிவிலனாயி
னிழற்கண்முயிறாய் விடும்.

(எ-று) இளையான்றுறந்துதவஞ்செய்த றக்கது,
செல்வன்றுறந்துதவஞ்செய்த றக்கது, செல்வத்தையு
டையானில்லறத்தின்கணின் றிடையிட்டடையூண்மறுத்
துநோன்புபுரித றக்கது, கற்புடையாளவனப்புதக்கது,
ஒருவனையடையாளறிவிலனாயொழுகி னிழலின்கண்மு
யிறேட்டாக்கும் (௬௮)

பொய்யார்க்கவர்க்கம்வாயானிரையம்பொருள்தான
னமையார்மடந்தையால்வாழ்வினிது-மெய்யன்றான்
மைத்தகணீண்டமலர்க்கண்ணாய்தீதன்று
மெத்தவுமாணும்படல்.

(எ-து) பொய்நெறியாலொழுகினவர்க்குச்சுவர்க்கமுளதாம், மெய்நெறியிலொழுகினவர்க்குநிரையமுளதாம், பொருள்தேடுதலினிதாம், குற்றமிக்கமடந்தையரோடுகூடியில்வாழுமில்வாழ்க்கையினிதாமென்றல்மெய்மையன்றால் மைத்தகணீண்டமலர்க்கண்ணாய்யாதேனுமொருதவம்படுகல்தீதன்றுநன்மையேயாம்()

புல்லறத்தினன்றுமனைவாழ்க்கைபோற்றுடைத்தே
னல்லறத்தாரோடுநடக்கலா-கல்லறத்தார்க்
கட்டுட்டுண்டாற்றவாழ்ந்தார்களேயிம்மையா
லட்டுட்டுண்டாற்றவாழ்வார்.

(எ-து) புல்லியதுறவறத்தினன்று மனைவாழ்க்கை, மனையறத்திற்குச்சொன்னபடியேயொழுகிற்றுறவறத்தாரோடுநடக்கலாம், ஆதலானல்லதுறவறத்தார்க்குத்தாமாக்கியிட்டே, தாமுமிடப்படாதுண்டவர்களிப்பிறப்பின்கண்மிகவிட்டுண்டில்வாழ்க்கைவாழ்வார்-எ-று()

ஈவதுநன்றுதீதியாமைநல்லவா
மேவதுநன்றுமேவாதாரோ-டோ

கேட்டிற்றலைநிற்க கேடிலுயர்கதிக்கே
யோட்டுதலவனிற்குமூர்ந்து.

(எ-து) பிறர்க்கொன்றையீவதுமன்று, பிறர்க்கீயா மைதீது, மேவாதாரோடல்லராயிருப்பார் மேவியொ ழுகுவதுமன்று, நன்னெறிக்குவழியாகிய நூலி னையேகேட்டதன்கண்ணேநிற்க, கேடிலாதவுயர்கதியாகி யவீட்டுநெறியின்கண்ணேசெல்லுஞ் செலவின்கண் ணேநிற்கமேற்கொண்டு-எ-று. (௫௧)

உண்ணிடத்துமொன்னார்மெலிவிடத்துமந்திரங்கொ
ண்,டெண்ணிடத்துஞ்செல்லாமைதான்றலையே-யெண்
யுணைப்பூசல்கோறலுயர்தவமேற்சங்கைக் (ணி
கணைப்பூசைபோற்றக் கடை.

(எ-து) பிறருண்ணுமிடத்தும், பகைவராயினார் தளர்ந்தவிடத்தும, பிறர்சூழ்ச்சிகொள்ளுமிடத்துச்செ ல்லாமையும், தாமொருவர்க்குத்தலைமையாகிய குணமா ராய்ந்து பிறரொருமாறுபட்டுச்சொல்லுஞ்சொலவின்றி த் தமக்குளதாகப் பாதுகாத்தலைச்செய்தல், மிக்கவறத் தைமேற்கொண்டகாலத்துப் பிறவுயிரைக்கொன்றுதின் கை, காரணமாய்ந்தாற்றவவேடங்கொண்டபூசையொத் தல்கீழ்மை-எ-று. (௫௨)

பத்தினிசேவகன்பொத்தில்கடுந்தவசி (ன்றி
வொத்திலொருட்டுறத்துச்செவ்வியான் - பொத்தி

வைத்தார்வழக்குஞ்சான்றவர்கஞ்செம்மை
செத்தாலறிக சிறந்து.

(எ-து) பத்தினியும், சேவகனும், குற்றமில்லாத கடுந்தவசியும், பொருட்டிறத்தின்கட் பொத்தின்றிச் செவ்வியனாய்த்தேறப்படுவானும், முதன்மையாகவாச னமேல வைக்கப்பட்டார்போதநன்றிவழக்கும் சான்ற வனுமென விவ்வைவர்செம்மையு மிவர்செத்தாலறிக மிகவும்—எ-று. (௱௩)

வழிப்படாஅவாயல்வருந்தாமைவாய்மை
குழிப்படாதீச்சொற்களோடு-மொழிப்பட்ட
காய்ந்துவிடுதல்களைந்துயகற்றல
ராய்ந்துவிடுதலறம்.

(எ-து) பிறர்வழிச்செலவும், வாய்க்குங்காரியங்களை நயன்றுவருந்தாமை, மெய்ம்மையல்லா நெறியின்கட் சேறல், பிறரைப்பழிகூறுஞ்சொற்கள், நல்லார்சொல்ல ப்பட்ட குணங்களைந்து நீக்குதலென விவ்வைந்தையு ங் கற்றறிவார்களைந்துநீக்குதலறமாவது—எ-று. (௱௪)

மல்லிவர்தோண்மக்காயன் மாணாக்கன்மாநிலத்து
பல்லவர்நோய்நீக்கும்பாங்கறும்-கல்லா
மறுபஞ்சந்திரமபுகமைமாக்காரியாசான்
சிறுபஞ்சமூலஞ் செய்தான்.

சிறுபஞ்சமூலமூலமும் உரையும்
முற்றிற்று.

இந்நூலில் (அசு) வது பாட்டு சிலபிரதிகளிலில்லாம லும் அதுமுதல் (சுசு) வது பாட்டுவரை (நு) பாடல்கள முழுமையுமில்லாமலும் (சுஉ) வது பாட்டிற்கு (ட) அடிமாத்திரமுமிருக்கின்றன. (அசு) வது பாட்டிற்கு உரைகாணப்படவில்லை. (சுஉ) வது பாட்டிற்கு முழுமையுமுளதாயிருக்கின்றது. இதுசங்கமருவிய கீழ்க்கணக்கினொன்றாய்ப்பழமையாய்வருதலான் குறைந்தபாடல்கள்சிதைந்தகாரணந் தெரியப்படவில்லை. உரையாசிரியர்பெயர் காண்பதரிதாயினுஞ் சங்கமருவிய கீழ்கணக்கு(கஅ) இம் பாரத்துவாசிநச்சினார்க்கினியாருரையெனச்சிலர்சொல்லுகின்றார்கள். கல்விச்செல்வமிக்குடையார்தமதுபிரதிகளில் சிதைந்திருக்கும் பாடல்களையும் உரையாசிரியர்பெயரையும் காண்பார்களாயின் (உ) வது முறைப்பதிப்பிடுவதற்குள் தெரிவிப்பார்களென்றெதிர்பார்க்கின்றேன்.

சங்கமருவிய கீழ்க்கணக்கு(கஅ)உள் அச்சிட்டனபோக மற்றவையும் உடனே உரையுடனச்சிடுகின்றேன்.

இங்ஙனம்,

கொ- சண்முகசுந்தரமுதலியார்.